**<u>முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>**

முன்னிலை:- திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 23 ம்நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-பங்குனி திங்கள் 9 ம்நாள்)

**<u>அசல் வழக்கு எண்.19/2018</u>**
(CNR No.TNED01-000046-2018)

விஜயபுரி (எ) மணி, வயது சுமார் 61, த/பெ.பெரியண்ண கவுண்டர், வசிப்பிடம் பாவாயிகாட்டு தோட்டம், பொன்முடி கிராமம், பெருந்துறை தாலூக்கா.

.. வாதி

// எதிர் //

1. பூங்கொடி (எ) வசந்தி, வயது சுமார் 57, க/பெ.ஈஸ்வரன், வசிப்பிடம் மேற்கு தோட்டம், சாவடிப்பாளையம், விஜயபுரி கிராமம், பெருந்துறை தாலூக்கா.
2. ருக்மணி, வயது சுமார் 55, க/பெ.சண்முகம், வசிப்பிடம் 73, (குப்பன்தோட்டம்), வெள்ளாங்கோவில் கிராமம், கோபிசெட்டிபாளையம் தாலூக்கா.
3. தனலட்சுமி, வயது சுமார் 53, க/பெ.சுப்பிரமணியம், வசிப்பிடம் நாகப்பா கவுண்டனூர், கொளப்பலூர் கிராமம், கோபிசெட்டிபாளையம் தாலூக்கா.

.. பிரதிவாதிகள்

வாதி தாவாச் சொத்தின் முழு உரிமையாளர் என்று விளம்புகை செய்யக் கோரியும், பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ எவரும் தாவாச் சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் இடையூறு செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரியும் மற்றும் வாதியின் இவ்வழக்குச் செலவுத் தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் வாதியால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தாவா தாக்கல் செய்த நாள் | 11.01.2018 |
| வழக்கு மூலம் | ஜுன் 1999, 19.06.2000, 22.06.2000, 28.12.2017 ஆகிய தேதிகளிலும் அதற்கு பின்னிட்டு வரும் தேதிகளிலும் இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குட்பட்ட பொன்முடி, பெருந்துறை தாலூக்காவில் ஏற்பட்டுள்ளது. |
| வழக்கு மதிப்பு | மொத்த மதிப்பு ரூ.20,00,000/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டம் பிரிவு 25(b)ன் கீழ் செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணம் ரூ.60,000/-. |

<u>வழக்கு மதிப்பீட்டு விபரம்</u>

| | |
|---|---|
| தாவா 1 ம் அயிட்ட சொத்துக்களின் சந்தை மதிப்பு | ரூ.15,00,000/- |
| தாவா 2 ம் அயிட்ட சொத்துக்களின் சந்தை மதிப்பு | ரூ.10,00,000/- |
| தாவா 3 ம் அயிட்ட சொத்துக்களின் சந்தை மதிப்பு | <u>ரூ.15,00,000/</u>- |
| மொத்த மதிப்பு | ரூ.40,00,000/- |
| அதில் ½ சந்தை மதிப்பு = | ரூ.20,00,000/- |

இதற்கு திருத்தப்பட்ட தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் 6/2017 ன்படி பிரிவு 25(b) ன் கீழ் நீதிமன்ற கட்டணம் ரூ.60,000/- செலுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் அ.வ.எண்.306/2019 ன் வாதிகள் பெருந்துறை, சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.222/2010 வழக்கை தாக்கல் செய்து கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்து, வழக்குரை திருத்தம் செய்யப்பட்ட பிறகு பண ஆள்வரைக்காக வழக்குரை திருப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அ.வ.எண்.306/2019 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அ.வ.எண்.19/2018 வழக்குடன் ஒருசேர இணைந்து நடத்த உத்தரவிடப்பட்டு, மேற்படி இரண்டு வழக்குகளும் இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.03.2026 ம்தேதி இறுதியாக ஒருசேர விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அ.வ.எண்.19/2018 ன்

வாதி தரப்பில் திரு.பி.திருமலைராஜன், வழக்கறிஞர் அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் திரு.ஏ.சி.முத்துசாமி, வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை ஒருசேரக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, வழக்கு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## தீர்ப்பாணை

1. வாதி கோரும் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. வழக்கின் தன்மையையும் தரப்பினர்களின் உறவுமுறையையும் கருத்திற்கொண்டு தரப்பினர்கள் அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

### சான்றளிக்கப்பட்ட செலவுத் தொகைப் பட்டியல்

| வாதி தரப்பில் | பிரதிவாதிகள் தரப்பில் |
|---|---|

(செலவு தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

### சொத்து விபரம்

அயிட்டம் 1-

ஈரோடு பதிவு மாவட்டம், பெருந்துறை சார்பதிவு மாவட்டம், பெருந்துறை வட்டம், பொன்முடி கிராமம், ரீ.சர்வே எண்.6/2 ல் ஹெக்டேர் 1.57.0 த.ரூ.4.35 இதற்கு பழைய க.ச.எண்.95 ல் பு.ஏ.3.88.

இதில் உள்ள கிணறு-1, ஆழ்குழாய் கிணறு -1, அதில் உள்ள 7.5 ஹெச்.பி. மின்சார பம்ப் செட் பொன்முடி பகிர்மானம் 237 நெ.மற்றும் அது சார்ந்த தண்ணீர்

ஏற்றி சப்ளை செய்ய உள்ள அனைத்து உபகரணங்கள், மேலும், இதில் வாதியால் கட்டப்பட்டுள்ள புதிய குடியிருப்பு தார்சு வீடு, பழைய வீடு கோழிப்பண்ணை, பொன்முடி மின் பகிர்மானம் எண்.277 மற்றும் இதர சாதனங்கள் கதவு, நிலவு, கட்டுக்கோப்பு சுற்றியும் உள்ள காலியிடம், பொதுத்தடம் உட்பட மேற்படி வீடு பொன்முடி கிராம பஞ்சாயத்து எல்லையில் கதவு எண்.1/60 இலக்கமிட்டது வரி விதிப்பு எண்.61.

தற்கால மதிப்பு ரூ.15,00,000/-

<u>அயிட்டம் -2</u>

ஈரோடு பதிவு மாவட்டம், பெருந்துறை சார்பதிவு மாவட்டம், பெருந்துறை வட்டம், பொன்முடி கிராமம், பழைய க.ச.எண்.97 பு.ஏ.12.20 இதில்,

அ) கிழமேல் தடத்திற்கு தெற்கு, முத்துசாமிக் கவுண்டர் பூமிக்கு வடக்கு, சின்னான மற்றும் முத்துசாமி கவுண்டர் பங்குக்கும் மேற்கு, வாதிக்கு பாத்தியப்பட்ட இதர பங்கு பூமிக்கும் கிழக்கு,

இதன் மத்தியில் உள்ள பு.ஏ.1.26 பரப்புள்ள பூமியும், பின்னும் அதே ச.எண்ணில்,

ஆ) முத்துசாமிக் கவுண்டர் பூமிக்கு வாதியின் இதர பூமிக்கும் மேற்கு, வாதியின் இதர பூமிக்கு கிழக்கும், வடக்கும், கிழமேல் தடத்திற்கும் தெற்கும்,

இதன் மத்தியில் உள்ள பு.ஏ.1.00 பரப்புள்ள பூமி முழுமையும், இதர வாய்க்கால் வாரி இவைகளுக்காக விடப்பட்டிருக்கும் பொதுவான நிலத்தில் உள்ள 3/8 பங்குக்கு பு.ஏ.0.06-3/4 பரப்பு. மேலும்,

இ) மேற்கண்ட சர்வே எண்ணில்,

சின்னானகவுண்டர், முத்துசாமி கவுண்டர் மற்றும் பொது வண்டித் தடத்திற்கும் வடக்கு, வாதிக்குப் பாத்தியப்பட்ட இதர பங்கு பூமிக்கும் தெற்கு, பு.ஏ.0.18 பரப்புள்ள பொது இடத்திற்கு மேற்கு, வாதிக்குப் பாத்தியப்பட்ட இதர பங்கு பூமிக்கு கிழக்கு, இதன் மத்தியில் பு.ஏ.0.17 பரப்புள்ள பூமியும்,

மேலும், அதே சர்வே எண்ணில்,

பழைய க.ச. எண்கள் 98, 99 பூமிகளுக்கு கிழக்கு, வாதிக்கு பாத்தியப்பட்ட இதர பங்கு பூமிக்கும் மேற்கு, முத்துசாமி கவுண்டர் பங்கு பூமிக்கு தெற்கு, பொது வண்டித்தடத்திற்கும் வடக்கு,

இதன் மத்தியில் உள்ள பு.ஏ.1.03 பரப்புள்ள பூமியும்,

மேலும், அதே சர்வே எண்ணில் வடபுறம் உள்ள கிழமேல் வண்டித்தடத்தில் பொதுவில் உள்ள பு.ஏ.0.16-ல் பொதுவில் 3/8 பங்குக்கும் 0.06 ஏக்கர் பரப்பும்,

ஏரிக்குத் தென்புறம் உள்ள கிழமேல் வண்டித்தடம் பு.ஏ.0.13 பரப்புள்ளதில் பொதுவில் 3/8 பங்குக்கு பு.ஏ.0.05-ம்,

மேலும், அதே சர்வே எண்ணில் முத்துசாமி கவுண்டர் பூமிக்கும் மேற்கு, சின்னானகவுண்டர் முத்துசாமி கவுண்டர் பூமிக்கும் கிழக்கு, கிழமேல் வண்டித் தடத்திற்கும் தெற்கு, க.ச.100 நெ.பூமிக்கும் வடக்கு, இதன் மத்தியில் பு.ஏ. 1.55 பரப்பு முழுவதும் ஆக மொத்தம் பு.ஏ. 4.18 -3/4 பரப்புள்ள பூமி முழுவதும் அயிட்டம் 2-க்கு கட்டுப்பட்டது. இதன் ரீ.ச.எண்கள்.3 மற்றும் 4 ஆகும்.

இதன் தற்கால மதிப்பு ரூ .10,00,000/-

<u>அயிட்டம் 3:</u>

ஈரோடு பதிவு மாவட்டம், பெருந்துறை சார்பதிவு மாவட்டம், பெருந்துறை வட்டம், பொன்முடி கிராமம், பழைய க.ச.எண்.100 க்கு

புதிய ரீ.ச.எண்.2/1 பு.ஹெ.2.21.0 த.ரூ.6.12

புதிய ரீ.ச.எண்.2/2 பு.ஹெ.2.57.5 த.ரூ.7.13

ஆக மொத்தம் பு.ஹெ.4.78.5-க்கு த.ரூ.13.25-க்கு பரப்பளவு பு.ஏ.11.92 பரப்புள்ள பூமி முழுவதும். ஷை பூமியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகள் - 2, அதில் உள்ள மின்

மோட்டார் பம்ப் செட் மற்றும் தண்ணீர் எடுக்க தேவையான சாதனங்கள் இதற்கு பொன்முடி மின் பகிர்மானம் 333 ஆகும்.

இதன் தற்கால மதிப்பு ரூ.15,00,000/-

இன்று 2026ம் வருடம் மார்ச் மாதம் 23ம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு வழங்கப்பட்டது.

S EZHIL

Digitally signed by S EZHIL
Date: 2026.03.23 19:53:17 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

ஈரோடு.

தீர்ப்பாணை
அ.வ.எண்.19/2018
நாள் : 23.03.2026
மு.கூ.மா.நீதிமன்றம்.ஈரோடு.

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE OF ERODE.

**O.S.No.19/2018**

Vijayapuri @ Mani -- Plaintiff

/Vs/

1.Poongodi @ Vasanthi and 2 others --Defendants

VALUATION SLIP

| | | | |
|---|---|---|---|
| 1. | Nature of suit | : | Suit for declaration and consequential permanent injunction |
| 2. | Section and sub section of the TNCF Act | : | Section 25(b) of Tamil Nadu Court Fees and Suits Valuation Act. |
| 3. | Market value | : | Rs.20,00,000/- |
| 4. | Court fee paid | : | Rs.60,000/- |

Sd/-xxxx
Advocate for plaintiff

Sd/-xxxx
Plaintiff

// By Order //

(Sd./)Translator
IADJ Court, Erode.